


# ‘கும்பிடுறேன் சாமி’, ‘நமஸ்காரம்’–இரண்டையும் ஒழித்தது, திராவிட இயக்கம்!

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் ஒன்பதாவது அமர்வில் ‘ஆதிக்கத்திற்கு அடிபணியாத ஆலமரம்’ என்ற தலைப்பில், எழுத்தாளர் வே.மதிமாறன் அவர்கள் ஆற்றிய உரை :**

“திராவிட இயக்கத்தின் ஆதிக்க எதிர்ப்பு மரபில், பத்திரிகை மரபு என்பதை ஒரு வரியில் சொல்லவேண்டுமென்றால். நீதிக்கட்சி ஆரம்பித்த ‘திராவிடன்’ இதழில் இருந்து ‘முரசொலி’ வரை உள்ள மரபு என்பது, ‘இந்து’, ‘இந்தியா’, ‘சுதேசமித்திரன்’, ‘ஆனந்த விகடன்’, ‘தினமணி’ போன்ற பார்ப்பனப் பத்திரிகைகளில் என்ன எழுதப்பட்டனவோ, அதற்கு எதிராக இயங்குவதுதான் திராவிட இயக்கப் பத்திரிகை மரபு.

## பெரியார் தந்த துணிச்சல்

பத்திரிகை நடத்துவதற்கு மொழி அறிவோ, ஆங்கிலப் புலமையோ, பெரிய ஞானமோ அவசியமில்லை, மொழி உணர்வும், அரசியல் அறிவும் உள்ள, எழுதப் படிக்கத் தெரிந்த யாரும் பத்திரிகை நடத்தலாம் என்பதை ஜனநாயகப்படுத்திய ஒரே இந்தியத் தலைவர் தந்தை பெரியார்தான். பத்திரிகை நடத்துவது, பத்திரிகை படிப்பது என்கிற ஜனநாயகத் தன்மையை அவர் உருவாக்கினார்.

நான் எல்லாம் இன்றைக்கு ஒரு பேச்சாளனாக வந்திருக்கிறேன், எழுத்தாளனாக வந்திருக்கிறேன் என்றால், அதற்கு காரணம் பெரியார் மரபு. எதைக் குறித்தும் கேள்வி கேட்பது என்ற துணிச்சலைப் பெரியார் உருவாக்கினார். அதை திராவிட முன்னேற்றக்கழகமும் தொடர்ந்தது.

## எல்லோரும் பத்திரிகையாளர்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் முக்கியமான தலைவர்கள் ஐந்து பேர் இருந்தார்கள் என்று சொன்னால், இரண்டாம் கட்டத் தலைவர்கள் 50 பேர் இருந்தார்கள். முதல்கட்டம், இரண்டாம் கட்டம் என்று எல்லா நிலைகளில் இருந்தவர்களும் இதழ்களை நடத்தினார்கள். நம் அரசியலைச் சொல்லுகிற நேரத்தில், நம் மீது முன்வைக்கப்பட்ட அவதூறுகளுக்குப் பதில் சொல்வதும் திராவிட இயக்க இதழ்களின் வழிமுறைகளாக இருந்தன.

## கும்பிடுறேன் சாமி, நமஸ்காரம்

‘கும்பிடுறேன் சாமி’ என்கிற அடிமைத் தமிழையும், ‘நமஸ்காரம்’ என்கிற ஆதிக்க சமஸ்கிருதத்தையும் ஒழித்து, ‘வணக்கம்’ என்கிற சுயமரியாதை மிக்க சொல்லை அறிமுகப்படுத்தி மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தது பெரியார் இயக்கம், அண்ணா, கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம்.

தமிழ்நாட்டின் அரசியலையும் வரலாற்றையும் இரண்டே சொற்களில் சொல்லிவிடலாம். ஒரு சொல் ‘கும்பிடுறேன் சாமி’. இன்னொரு சொல் ‘நமஸ்காரம்’.

மிக ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஆதிக்க சாதியைப் பார்த்தால், ‘கும்பிடுறேன் சாமி’ என்று சொல்ல வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆதிக்க சாதிக்காரர்கள் அவர்களுக்குள் பேசிக்கொள்ளும்போது ‘நமஸ்காரம்’ என்று சொல்லிக்கொள்வார்கள்.

இந்தக் காலகட்டத்தில்தான் பெரியார் வருகிறார். அந்தப் பக்கம் ‘கும்பிடுறேன் சாமி’, இந்தப் பக்கம் ‘நமஸ்காரம்’. இரண்டையும் எதிர்த்த பெரியார், ‘என்ன, கும்பிடுறேன் சாமி’, அவனைப் பார்த்து, நீ எதுக்குக் கும்பிடுகிறாய்? தோளில் இருக்கிற துண்டை எடுத்து ஏன் இடுப்பில் கட்டுகிறாய்?’ என்று சொல்லி, துண்டை உருவித் தோளில் போட்டு, நீ யாரைப் பார்த்தாலும் இனி ‘கும்பிடுறேன் சாமி’ என்று சொல்லக் கூடாது; ’வணக்கம்’ என்று மட்டும்தான் சொல்ல வேண்டும் என்றார். அந்தப் பக்கத்தில் என்ன செய்தார்? ‘அது என்ன நமஸ்காரம், பலகாரம்? இனி ‘நமஸ்காரம்’ சொல்லக் கூடாது. நீ யாரைப் பார்த்தாலும் ‘வணக்கம்’ என்று மட்டும்தான் சொல்ல வேண்டும் என்று கலகம் செய்தார்.



**வே.மதிமாறன்**
எழுத்தாளர்



இன்றைக்கு இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ‘நமஸ்காரம்’ இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் கிடையாது. இப்போதுகூட நீங்கள் செய்தி சேனல்களைப் பாருங்கள். கேரளா, உத்தரப் பிரதேசத்தில் இருந்து காஷ்மீர் வரை, ‘நமஸ்கார்’ என்று சொல்லித்தான் செய்தி வாசிப்பார்கள். ஆனால் தமிழ்நாட்டு தொலைக்காட்சிகளிலோ செய்தி வாசிக்கும்போது ‘வணக்கம்’ சொல்கிறார்கள். மோடிஜியே இங்க வந்தாலும், ‘நமஸ்காரம்’ இல்லை, ‘வணக்கம்’தான் சொல்லியாக வேண்டும் என்ற நிலையை உருவாக்கியது திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக்கழகம்.

‘ஒவ்வொரு அரிசியிலும் அவரவர் பெயர் எழுதப்பட்டிருக்கிறது’ என்று சொல்வார்கள் இல்லையா, அதேபோல் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம், பெரியார், நீதிக்கட்சியின் பெயர் எழுதப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

## தி.மு.க என்னும் மக்கள் இயக்கம்

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்குவதற்கு முன், அரசியல் அதிகாரம் பண்ணையார்கள், மிராசுதார்கள், பணக்காரர்களிடம் மட்டுமே இருந்தது. . தன் பண்ணையில் வேலை செய்கிற ஓர் இளைஞனை போலீஸ் சந்தேக வழக்கில் அழைத்துச் சென்றால், அவனை மீட்டுவர அவன் தாய் பண்ணையார் வீட்டு வாசலில்தான் நிற்க வேண்டும். அவரைப் பார்ப்பதற்கே நான்கு நாட்கள் ஆகிவிடும். சில நேரங்களில் அவனைக் கைது செய்யச் சொன்னதே, பண்ணையாராகக்கூட இருந்திருக்கும்.

தி.மு.க தொடங்கப்பட்ட பிறகு, அதுபோன்ற எளியவரை போலீஸ் இரவு 10 மணிக்கு அழைத்துச் சென்றால், அவன் தாய் 10.15 மணிக்கு பக்கத்துத் தெருவில் இருக்கும் தன் மகனைப் போன்ற ஒரு கூலித் தொழிலாளியான தி.மு.க. வட்டச் செயலாளரின் வீட்டுக்குச் செல்வார்.

தன் ஊருக்கு வரவிருக்கும் தன் தலைவர் வருகைக்காக போஸ்டர் ஒட்டிவிட்டு, அவசரமாக சாப்பிட உட்கார்ந்த அந்த தி.மு.க வட்டச்செயலாளர், அந்தத் தாயின் அழுகுரல் தாங்காமல், சோற்றில் கையை உதறிவிட்டு, வியர்வை நாற்றத்துடன் கூடிய சட்டையை அணிந்துகொண்டு, காவல் நிலையம் சென்று இரவு 11.30 மணிக்குள் அந்த இளைஞனை வீட்டில் சேர்ப்பார்.

1,000 ஏக்கர் வைத்திருக்கிற பண்ணையார் காவல் நிலையம் சென்றால், அவரை எப்படி நாற்காலியில் உட்கார வைத்துப் பேசுவார்களோ; அதே மரியாதையுடன் அடுத்த வேளை உணவிற்குச் சிரமப்படுகிற தி.மு.க வட்டச் செயலாளருக்கும் நாற்காலி போடப்பட்டது. எப்படி அவருக்கு காவல் நிலையத்தில் அந்த அதிகாரம் கிடைத்தது?

ஒரு காவல் நிலையத்தில் 1,000 ஏக்கர் வைத்திருக்கும் பண்ணையார் உள்ளே போனார் என்றால், நாற்காலி போட்டு, காவல் ஆய்வாளர் எழுந்து, வணக்கம் சொல்லி, ‘உட்காருங்கள்’ என்று சொல்வார். அவருக்கு ஏன் இந்த மரியாதை? ஏனென்றால், அவர் ஆதிக்கச் சாதியாக இருக்கிறார். அதுமட்டுமல்ல, ஆயிரம் ஏக்கர் வைத்திருக்கிறார் என்பதனால். அதே காவல் நிலையத்துக்குச் செல்லும் தி.மு.க. வட்டச்செயலாளர் யார்? அடுத்த வேளை சோற்றுக்கே கஷ்டப்படுபவர். பிறகு, இவருக்கு ஏன் நாற்காலி போட்டார்கள் தெரியுமா? இவர் கட்டியிருந்த அழுக்கான வேட்டியில் இருந்த கருப்பு சிவப்பு வண்ணத் திற்காகத்தான்.

## அண்ணா

1957-இல் ஒரு கூட்டத்தில் அண்ணாவிடம் சாதாரண தொழிலாளிகள், ஏழை மக்கள் நிதியளிக்கிறார்கள். அந்தப் பணத்தை வாங்கிவிட்டு, அண்ணா சொல்கிறார். ‘காங்கிரஸ் கட்சியில் இருக்கிற பண்ணையார்களிடம் இருக்கும் பணத்தில் பன்னீர் வாசனை இருக்கலாம். ஆனால், என் தோழர்கள், ரிக்ஷா ஓட்டுபவரும், இந்த விவசாயக் கூலியும் கொடுக்கிற இந்த நிதியில், வியர்வை நாற்றம் இருக்கலாம். ஆனால், பன்னீர் வாசனை கொண்ட பணத்தை, வியர்வை நாற்றம் கொண்ட பணம்தான் விரட்டி அடித்திருக்கிறது. வரலாற்றில் அது நடக்கும்’ என்று அண்ணா சொன்னார். இப்படித்தான் ஆதிக்கத்தை எதிர்த்து 75 ஆண்டுக்கால ஆலமரமாய் நிமிர்ந்து நிற்கிறது திராவிட முன்னேற்றக்கழகம்.”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழா குறித்து, சுந்தரவாணன் பாண்டியன் என்பவரின் முகநூல் பதிவு :**

‘தமிழ்நாடு எப்போதும் கல்வி, அறிவு, சமத்துவம் ஆகியவற்றில் இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது. அந்த மரபைத் தொடரும் விதமாக தி.மு.க இளைஞர் அணி மிகப்பெரிய அளவில் ‘அறிவுத் திருவிழா’வை வெற்றிகரமாக நடத்தியது. வள்ளுவர் கோட்டத்தில் நடந்து முடிந்த ஒரு வரலாற்று பெருவிழா – அது வெறும் வெற்றி விழாக் கொண்டாட்டமோ, புத்தகக் கண்காட்சியோ அல்ல; அது ஒரு சிந்தனையின் திருவிழா.

இந்தியாவில் எந்த ஒரு கட்சியோ இயக்கமோ தங்கள் வெள்ளி விழாவையோ, பொன் விழாவையோ, பவள விழாவையோ இப்படி ஒரு ஆக்கப்பூர்வமான வகையில் கொண்டாடியதில்லை.

அறிவின் வெளிச்சம்தான் சமுதாயத்தை முன்னேற்றும் சக்தி.பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்நாளெல்லாம் அதையே வலியுறுத்தினார். அந்த எண்ணமே ஒரு விழாவாக உயிர்ப்பெடுத்து, சென்னையின் இதயத்தில் மக்களை ஒன்றிணைத்திருக்கிறது. புத்தக வாசனை, அரங்கின் சத்தம், குழந்தைகளின் ஆர்வம், இளைஞர்களின் உற்சாகம் – ஒவ்வொன்றும் ஒன்றிணைந்து ஒரு சமூக விழிப்புணர்வை உருவாக்குகிறது.

பகுத்தறியும் திறனில்லா கல்வி வீணானது, அத்தகைய அறிவில்லா சுதந்திரம் அபாயமானது, இதை சரிசெய்யும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது.

ஒரு சிறுமி ‘பெண் ஏன் அடிமையானாள்?’ வாங்குகிறாள்.

ஒரு இளைஞன் ‘திராவிட இயக்கம் மற்றும் அறிவியல் சிந்தனை’ என்ற புத்தகத்தைப் படிக்கிறான்;

ஒரு முதியவர் ‘அண்ணா உரைகள் தொகுப்பு’ என்பதைக் கவனமாகப் புரட்டுகிறார்– இதுதான் இந்த விழாவின் உயிர்.

பகுத்தறிவு வயதைக் கடந்து அனைவரையும் இணைக்கிறது. ஒரு புத்தகம் வாசிக்கும் சிறுமி முதல் ஒரு ஆய்வுக்கட்டுரை வாசிக்கும் பேராசிரியர் வரை அனைவருக்கும் இந்த விழா புதிய உந்துசக்தியை அளிக்கிறது.